1979 நவம்பர் 3]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேணுகோபால் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சங்கம் பொருளாதார ரீதியில் தன்னிறைவு இல்லாத காரணத்தினால்தான் கலைக்கப்பட்டது. இந்தச் சங்கம் கலைக்கப்பட்டதற்குப் பிறகு, அது திருவண்ணாமலை கூட்டுறவு சங்கத்தோடு இணைக்கப் பட்டு, அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகளுக்கு பயிர்க் கடன் போன்ற கடன்களை கொடுத்து உதவி செய்வதற்கு இதனை திருவண்ணாமலை கூட்டுறவு சங்கத்தோடு இணைத்து, அவர்களுடைய நலன் பேணி பாதுகாக்கப்பட்டு வருகின்றது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாச்சிப்பட்டு கிராமத்திற்கு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே மேல்நிலைத் தேக்கத் தண்ணீர் தொட்டியைத் திறக்க வந்திருந்தபோது, இந்த விவசாய கூட்டுறவு சங்கத்தை நான் நிறுவுகிறேன் என்று வாக்குறுதி அளித்தார்களே, அது எந்த நிலையில் உள்ளது? அது என்ன ஆயிற்று? என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு நடைபெற்ற நிகழ்ச்சியின் போது அவர்கள் இந்த கோரிக்கையை வைத்திருக்கலாம். அதை இந்த அரசு பரிசிலனை செய்யும் என்று சொல்லியிருப்பேனே தவிர, செய்து முடிப்பேன் என்று உறுதிமொழி அளித்திருக்க மாட்டேன் என்பதை உங்கள் மேலான கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

பிடாகம் கிராம மணியம்.

* வினா எண். 85— திரு. வ. துலுக்காணம் : மாண்மிபுகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) உளுந்தூர்பேட்டை தொகுதி எலவானுசூர் கோட்டை (பிடாகம்) கிராம மணியம் பேரில் அரசுக்கு புகார் மனு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : உளுந்தூர் பேட்டை தொகுதி எலவானுசூர் கோட்டை கிராம மணியம் பேரில் குற்றம் சாட்டப்பட்டு அதை விசாரணை செய்த பிறகு அவருக்கு 20 ரூபாய் அபராதம் போடப்பட்டது.